## - 29 -

# வெகுசன ஊடகச் செல்நெறியும் மாற்று ஊடகத்தின் தேவையும்

**அனுதர்ஷி லிங்கநாதன்,**
விரிவுரையாளர், ஊடகக் கற்கைகள் துறை,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்
*anutharsimedia@gmail.com*

ஆய்வுச் சுருக்கம்

எப்போதெல்லாம் சமூகம் மாற்றத்திற்குத் தயாராகின்றதோ அப்போது ஊடகம் மறுமலர்ச்சி காண ஆரம்பிக்கின்றது. போருக்குப் பின்னரான இலங்கையில் பாதிக்கப்பட்ட மக்களின் வாழ்வியலை மீட்டெடுக்கவும் மாற்றத்தைக் கொண்டுவரவும் மாற்று ஊடகத்தின் தேவை உணரப்பட்டிருக்கிறது. வெகுஜன ஊடகத் திணிப்பிலிருந்து விலகி, விளிம்பிலிருந்து மையம் நோக்கிய கீழிருந்து மேலான தொடர்பாடல் தான் இன்றைய தேவையாக இருக்கின்றது. இது மக்களை செயலற்ற நிலையிலிருந்து செயற்பாட்டு நிலையில் வைத்திருக்கும். போருக்குப் பின்னரான காலப்பகுதியில் பாதிக்கப்பட்ட மக்களின் எழுச்சிக்கு, பெண்களின் முன்னேற்றத்திற்கு, அதிகரித்துவரும் பெண்கள் மற்றும் சிறுவர்களுக்கு எதிரான பாலியல்ரீதியான வன்முறைகளுக்கு எதிராக, பாலினப்புதுமையினர் தொடர்பான விழிப்புணர்வை ஏற்படுத்த, நாட்டின் குறைவிருத்தியை மக்களிடம் கூறி அபிவிருத்தியை ஊக்குவிப்பதற்கு, அரசியல் மற்றும் சட்ட ஒழுங்கு நடைமுறைகள் தொடர்பான அறிவை மக்களிடத்தில் கொண்டுசேர்க்க, ஊடக அறத்தையும் சரியான ஊடகப் பயன்பாட்டினையும் மக்களிடம் கொண்டு சேர்க்கவெனப் பல்வேறு விடயங்களுக்காக மாற்று ஊடகத்தின் தேவை இன்று உணரப்பட்டிருக்கிறது. அதிகாரமற்றவர்களை மௌனிக்கச் செய்யும் வெகுஜன ஊடகப்போக்கிற்கும் தனியாள் உடமைக்கும் எதிரான மாற்று ஊடகம் மனிதத்தை மதிப்பதோடு சமூக, பொருளாதார, பண்பாட்டு, சமய, சாதீய, ஆதிக்க, அதிகார வர்க்கங்களின் கட்டுப்பாடுகளிலிருந்து விலகி அடித்தட்டு மக்களால் ஆளப்படுவதாக இருப்பதால் நேரடித்தன்மையுடன் சுயாதீனமாக இயங்கும் வல்லமைமிக்கது. வெகுஜன ஊடகங்கள் பல்வேறு பரிணாமங்களில் மக்களைக் கட்டுப்படுத்திக் கொண்டிருக்கின்ற சூழலில் மாற்று ஊடகத்தை குறிப்பாக இணையம் மூலமான மாற்று ஊடகத்தைச் சரியாக ஆளத்தெரிந்தால் சமூக மாற்றம் சாத்தியமாகும் வாய்ப்புக்கள் அதிகமுள்ளன.

திறவுச் சொற்கள்: வெகுஜன ஊடகம், மாற்று ஊடகம், இணையம், அடித்தட்டு மக்கள், சமூக மாற்றம்

தொடர்பாடலின் மிகப்பெரும் பரப்பைப் பிரதான வெகுஜன ஊடகங்கள் ஆக்கிரமித்திருக்கின்ற இன்றைய காலகட்டத்தில், பிரதான வெகுஜன ஊடகத்தின் வணிக ரீதியான போக்குகள் மற்றும் இழிநிலை ஊடகவியல் செயற்பாடுகள் என்பன மாற்று ஊடகத்தின் தேவையை எமக்கு உணர்த்திவருகின்றன.

18ஆம் நூற்றாண்டில் ஹெபமாஸ் இனது 'பப்ளிக் ஸ்பியர்' (Public Sphere)ஐ மாற்று ஊடகவியலின் ஆரம்பமாகக் கொள்ளமுடியும். பின்னர், 1960களில் சமூகச்செயற்பாடுகள் ஊக்கம் பெற ஆரம்பித்தபோது, மரபு ரீதியான பலம் பொருந்திய ஊடகங்களுக்கு எதிராக 'மாற்று ஊடகவியல்' என்ற எண்ணக்கரு தோற்றம் பெற்றது. இன்று அது மரபு ரீதியான ஊடகவியலும் நவீனத்துவமும் இணைந்த ஒரு தளத்தில் நகர்ந்து செல்கின்றது.

மாற்று ஊடகம் என்றால் என்ன என்பதை வரையறுத்துக் கூறுவது மிகவும் கடிமான ஒரு விடயம். பிரதான நீரோட்டத்துக்கு வெளியே செயற்படும் ஒரு வெகுஜன ஊடகப்பாணியாக, மக்களின் நலனுக்காக மக்களால் முன்வைக்கப்படும், ஒடுக்கப்பட்ட மக்களின் குரல்களை ஓங்கி ஒலிக்கச்செய்யக்கூடிய ஜனநாயகத் தன்மை வாய்ந்த வியாபார நோக்கமற்ற ஊடகங்களாக மாற்று ஊடகங்கள் இருக்கின்றன. நிறுவனமயப்பட்ட பாரம்பரிய ஊடகப் போக்கில் இருந்து விலகி, கொள்கைகளுக்காகச் செயற்படுவனவாகவும் சமூகச் சிந்தனையில் தாக்கஞ் செலுத்திச் சமூகத்தில் மாற்றம் ஏற்படுத்தக்கூடியனவாகவும் மாற்று ஊடகங்கள் திகழ்கின்றன. ஆதிக்கத் தன்மை வாய்ந்த அச்சு, இலத்திரனியல் ஊடகங்களுடன் போட்டியிடக்கூடிய சக்திவாய்ந்த இவ் ஊடகங்கள் மூலமாக பிரதான வெகுஜன ஊடகங்களில் பேசப்படாத அல்லது பேசமுடியாத ஏராளமான அரசியல், சமூக, பொருளாதாரம் சார்ந்த பல்வேறுபட்ட விடயங்கள், விடுதலைநோக்கிய சிந்தனைகள் அதிகம் மாற்று ஊடகங்களில் பேசப்பட்டன, பேசப்பட்டும் வருகின்றன.

பின்னூட்டங்களையும் எதிர்வினைகளையும் உடனுக்குடன் சம்பாதித்து, அதற்கேற்ப தம்மைத் திருத்திக்கொள்வது மாற்றுத் தொடர்பாடலின் மிக முக்கிய பண்பாகும். பிரதான நீரோட்டத்தில் உள்ள ஊடகங்களின் உள்ளடக்கத்திலும் வேறுபட்ட உள்ளடக்கங்களை மாற்று ஊடகங்கள் கொண்டுள்ளன. ஒடுக்கப்பட்ட மக்கள், சிறுபான்மை இனங்கள், தொழிலாளர்களின் குரல்கள், தொழிற்சுரண்டல், பாலினப்புதுமையினர்,

வன்முறை, இனவாதம், நிறவாதம், சாதியம், பால்நிலைச் சமமின்மை போன்ற பல்வேறுபட்ட பிரச்சினைகள் பேசப்படுவதுடன், விழிப்புணர்வுகளும் ஏற்படுத்தப்படுகின்றன. முதலாளித்துவம், நுகர்வுவாதம், சனரஞ்சகக் கலாசாரம், ஆணாதிக்கம் போன்ற கோட்பாடுகளை எதிர்ப்பவையாகவும் அவை இருக்கின்றன. பிரதான வெகுஜன ஊடகங்கள் கவர்ச்சிகரமாகவும் புனைவுகளை அதிகம் கொண்டிருக்க, மாற்று ஊடகங்கள் யதார்த்தத்தை நடுநிலைமையுடன் பேசமுயற்சிக்கின்றன.

மக்கள் விரும்புவதை மட்டுமல்ல, மக்களுக்குத் தேவையான விடயங்களையும் உண்மைத் தன்மையுடன் வழங்குவதுதான் ஊடகத்தின் பணி. அதனை அதிகாரநிலையில் உள்ள பணம் படைத்த வெகுஜன ஊடகங்களை விட மாற்று ஊடகங்கள் அதிகம் மேற்கொள்கின்றன. இதன் மூலம் சாதாரண மக்களை அவை வலுப்படுத்துகின்றன. பிரதான வெகுஜன ஊடகங்களுடைய பரந்த வலையமைப்பு மூலம் இலகுவில் செய்திகளைப் பெற்றுக்கொள்ள முடியும். ஆனால், மாற்று ஊடகங்களில் தனிநபர் பங்களிப்பை அதிகம் பயன்படுத்தவேண்டிய தேவை இருக்கிறது. பெரும்பாலான சந்தர்ப்பத்தில் அது தனியாள் முயற்சியாகவே இருக்கிறது.

ஆர்வமும் பொதுநலநாட்டமும் மிக்கவர்களால்தான் (செயற்பாட்டாளர்கள்) மாற்று ஊடகங்களைத் தோற்றுவிக்க முடியும். மாற்று ஊடகத்தினுடைய ஒரு ஊடகவியலாளனின் அல்லது செயற்பாட்டாளர்களின் பணி, தான் சார்ந்த ஊடகத்தின் இலட்சியத்தை மக்களிடம் கொண்டுசேர்ப்பதாகும். இதன் மூலமான சமூக மாற்றமொன்றே அவர்களது எதிர்பார்ப்பாக இருக்கமுடியும். நிர்வாக வரம்புகளுக்கு அப்பாற்பட்டு எழுதக்கூடிய வாய்ப்பு மாற்று ஊடகங்களில் இருந்தாலும், அரசியல் ரீதியான அச்சுறுத்தல்களைத் தகர்த்து வெளிவருதல் என்பது பாரிய சவாலாக இருக்கின்றது.

ஒரு செயற்பாட்டாளராக, உண்மைகளை வெளிக்கொணரும் ஊடகவியலாளராக இந்தியாவில் கன்னட மொழியில் வெளிவரும் பிரதேசப் பத்திரிகையொன்றின் செய்தியாசிரியராகச் செயற்பட்ட கௌரி லங்கேஷ் கொலைசெய்யப்பட்டமை மாற்று ஊடகவியலாளர்களுக்கு எதிரான அச்சுறுத்தலுக்கும், வன்முறைகளுக்கும் மிகச் சிறந்த சமீபத்திய எடுத்துக்காட்டாக இருக்கிறது.

அனைவருக்குமான ஊடக மொழி என்பது சாதாரண மக்கள் புரிந்துகொள்ளக்கூடிய எளிய மொழிநடையில் இருத்தல் அவசியம். பிரபலமான, அதிக வாசகர்களைக் கொண்ட பத்திரிகைகளின் ஊடக மொழியை நோக்கும்போது அவற்றின் பிரபலத்திற்குப் பிரதான காரணமாக தெளிவான எளிய மொழிநடையை அவை கொண்டிருப்பதே காரணம் எனலாம். மேலோட்டமான ஊடகவியலாளர்கள் மொழிநடையை மேலும் சிக்கலாக்கிக் கொள்கிறார்கள். மாற்று ஊடகங்கள் சுயாதீனமானதாக மக்களுக்குப் புரியும் மொழியைக் கையாள்கின்றன.

இன்றைய காலகட்டத்தில் உலகளாவிய ரீதியில் அச்சு ஊடகங்கள், இலத்திரனியல் ஊடகங்கள், மற்றும் புதிய ஊடகங்கள் (சமுதாய ஊடகங்கள், சமூக ஊடகங்கள், சஞ்சிகைகள், வலைப்பூக்கள், இணையத்தளங்கள்) என அனைத்தும் சமூக மாற்றத்திற்கான மாற்று ஊடகங்களாகத் தொழிற்பட்டுவந்தாலும், அச்சு ஊடகங்கள் அதிகம் அடித்தட்டு மக்களிடம் சென்றடையக்கூடியனவாக இருக்கின்றன. அதே நேரம், பிரதான வெகுஜன ஊடகத்திற்குள்ளும் மாற்று ஊடகத்திற்கான வெளி காணப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. மக்கள் ஊடகவியலிற்கான வாய்ப்புக்களைக் குறிப்பிடத்தக்க ஊடகங்கள் வழங்குகின்றன. குறிப்பாக வாசகர் பக்கம், வாசகர் புகைப்படம் போன்ற விடயங்களைக் குறிப்பிடலாம்.

வர்த்தக நோக்கற்ற தன்னார்வ நிறுவனங்கள் மற்றும் பல்கலைக்கழகம் உள்ளிட்ட கல்வி நிறுவனங்கள் போன்றவற்றால் உருவாக்கப்படும் சமுதாய ஊடகங்கள் மாற்றுத் தொடர்பாடலில் மைல் கல் எனலாம். இவை சமுதாய வளர்ச்சிக்கு முக்கிய பங்காற்றுகின்றன. இன்னொருபுறம், சாதாரண மக்களது நாட்டாரியல் நிகழ்த்துகைகள் காத்திரமான ஒரு ஊடக வடிவமாகும். கிராமப்புற மக்களின் இத்தொடர்பாடல் வடிவத்தை மாற்று ஊடகமாக கொண்டு செல்ல முடியும். பறை இசை இன்று பெரும்பாலான இடங்களில் அடித்தட்டு மக்களின் குரலாகப் பயன்படுத்தப்பட்டுவருவதைக் காணலாம்.

இலங்கையில் மாற்று ஊடகங்களுக்கான தேவை இன்று அதிகம் உணரப்பட்டாலும் காத்திரமான மாற்று ஊடகங்கள் இல்லை என்றுதான் சொல்லவேண்டும். மாற்று ஊடகங்களின் தேவை பெரும்பாலான மக்களின் பெருங்கனவாகவே இருக்கிறது. இந்நிலையில் மாற்று ஊடகத்தை உருவாக்கும் தகைமை மக்களுக்கு இருக்கிறதா என்பதும் சிந்திக்கவேண்டிய விடயம். ஊடக ஒழுக்கம் பற்றிய போதிய அறிவற்ற மக்களின் ஊடகவியல் சில சந்தர்ப்பங்களில் மாற்று ஊடகவியலின் அடிப்படையையே சிதைத்துவிடக்கூடும்.

இணையம், வலைப்பூக்கள் மற்றும் சமூக ஊடகங்கள் மூலமான மாற்றுச் செயற்பாடுகள்

இலங்கையில் தொடர்ந்தாலும் சமூகத்தில் மாற்றங்களை ஏற்படுத்தக்கூடிய வகையில் காத்திரமான பணிகளை அவை பெரியளவில் செய்யவில்லை என்பதுதான் உண்மை. சமூக ஊடகங்களின் அதிகரித்த பாவனையும் தம்மை அதற்குள் சுருக்கிக் கொண்ட மக்களாலும் தனியான மாற்று ஊடகத்தினுடைய தேவை பெரியளவில் மக்களால் உணரப்படாமலிருக்கிறது.

மாற்றம், கிரவுன்ட் வியூஸ், ஜே.டி.எஸ் லங்கா மற்றும் பக்கமூனோ போன்ற இணைய ஊடகங்கள் பிரதான நீரோட்டத்திலிருந்து விலகி மக்களின் பேசப்படாத பிரச்சினைகளைப் பேச முனைந்தாலும், சாதாரண மக்கள் தங்களுடைய பிரச்சினைகளைப் பேசக்கூடிய, எழுதக்கூடிய அடித்தட்டுமக்களுக்கான தளமாக அவை இயங்கவில்லை என்பதே அவதானிப்பாக இருக்கிறது. பங்குபற்றல் ஊடகவியல் அற்ற மாற்றை, எப்படி முற்றுமுழுதாக மாற்று ஊடகமாகக்கொள்ள முடியும். அத்துடன் இம்மாற்று ஊடகங்கள் இணையத் தளத்துடன் மட்டுப்படுத்தப்பட்டிருப்பதால் நவீன தொழில்நுட்பம் சென்றடையாத மக்களை அவை சென்றடைய முடியாதனவாக இருப்பதைக் காணலாம். எமது சூழலில், சரிநிகர் மற்றும் சற்றடே ரிவியூ (Saturday Review) என்பன மாற்று ஊடகங்கள் என உதாரணம் குறிப்பிடலாம். ஆனால், அவை காலப்போக்கில் தமது வெளியீடுகளை நிறுத்திக்கொண்டன.

மக்கள், தம்முடைய பிரச்சினைகளை அல்லது தாம் சார்ந்த சமூகத்தின் பிரச்சினைகளை அவர்களால் தான் ஆழமாகக் கையாளமுடியும். பங்குபற்றல் ஊடகவியலே இதற்கு மிகப்பொருத்தமானதாக அமையும். அதே நேரம் தம்முடைய பேசப்படாத பிரச்சினைகளைப் பற்றிப் பேசும்போதுதான், அது தொடர்பில் மக்களும் ஈர்க்கப்படுகிறார்கள். மேலும் அறிவியல், மருத்துவம், சமூகவியல், வரலாறு, அரசியல், பொருளாதாரம், கல்வி, பண்பாடு, சுற்றுச்சூழல், வரலாற்றுப்பதிவு என அனைத்து விடயங்களுக்கும் ஊடகங்கள் முக்கியத்துவம் வழங்கவேண்டும். அப்போதுதான் பல்துறைசார் மாற்றத்தைச் சமூகத்தில் உருவாக்க முடியும்.

மூன்று தாப்தங்களுக்கு மேலாகத் தொடர்ந்த உள்நாட்டு மோதலில் யுத்தத்திற்குப் பிற்பட்டகாலப்பகுதியில் வாழ்ந்துகொண்டிருக்கின்ற அடித்தட்டு மக்களுடைய பேசப்படாத பல பிரச்சினைகளை உண்மையின் பக்கம் நின்று பேசவேண்டிய தளங்கள் அவசியம்.

ஒவ்வொரு நாளையும் பத்திரிகையுடன் தொடங்கும் எமது மக்களின் சிந்தனை வியாபார நோக்குடைய ஊடகவியலினால் மழுங்கடிக்கப்பட்டு வருகின்றது. மக்களின் சிந்தனையைத் தூண்டாத ஊடகவியல் சமூக மாற்றத்தையோ மறுமலர்ச்சியையோ உருவாக்கப் போவதில்லை. களச் செய்தி சேகரிப்புக்கு ஊடகவியலாளர் சென்று மக்களுடைய நிலைமைகளையும் கள நிலவரங்களையும் மாற்று ஊடகங்களின் மூலமாகச் சரியாக அறிக்கையிட முடியும். பெரும்பாலான வெகுஜன ஊடகங்களில் அடித்தட்டு மக்களின் சவால்களை, துயரங்களை நுகர்பொருளாக்கும் செயற்பாடுகள்தான் இடம்பெறுகின்றன. அவை மக்களின் உண்மையான வாழ்வியலைச் சித்திரிக்கத் தவறியுள்ளன.

அழிவின் விளிம்பில் இருக்கும் கலைகளை ஆவணப்படுத்தல் மற்றும் அவற்றுக்கான அங்கீகாரத்தைப் பெற்றுக்கொடுத்தல், அழிந்துவரும் எண்ணிக்கையில் சிறிய அளவிலான சமூகங்களின் மொழிகள், கலாசாரம் போன்றவற்றைப் பாதுகாத்தல், வெகுஜன ஊடகங்கள் வெளிக்கொணராத அல்லது பிரபலமற்றவை என பிரதான ஊடகங்கள் கருதும் விடயங்களைப் பேசுதல், சுற்றுச் சூழலியல் சார் விடயங்கள், விவசாயிகளுடைய பிரச்சினைகளைப் பேசுதல், நாடோடிகள், ஆதிவாசி மக்கள் எனப் பேசக்கூடிய ஏராளமான விடயங்கள் ஆழமாக ஆய்வுக்குட்படுத்தப்படாமல் எம்முன்னால் இருக்கின்றன.

மக்கள் பத்திரிகையாளர்கள், மக்கள் புகைப்படவியலாளர்கள் உருவாகுவதற்கான ஊக்குவிப்புக்கள் அவசியம். இதன் மூலம் பிரதான ஊடகங்கள் செய்ய முடியாத பணியை மாற்று ஊடகங்களால் வெளிக்கொண்டுவர முடியும். அவை உண்மைகளை ஆதாரத்துடன் கள ஆய்வின் மூலம் ஊடக அறத்துடன் சொல்லமுடியும்.

சேவை நோக்கமுடைய நிறுவனங்கள் மற்றும் செயற்பாட்டாளர்களின் உழைப்பில் சில மாற்று ஊடகங்கள் செயற்பட்டு வருகின்றன. அவை தமது செயற்பாடுகளை மேலும் விரிவுபடுத்தல் அவசியம். பிரதான வெகுஜன ஊடகங்கள் சமூக மாற்றத்திற்குத் தயாராகும்போது, மாற்று ஊடகவியல் நோக்கி நகரமுடியும். அத்துடன், அவை தம்மை மாற்றுத் தொடர்பாடல் தளத்திற்கு ஏற்ற வகையில் மாற்றியமைத்தல் அவசியம். கிராமப்புற மற்றும் சேரிவாழ் குழந்தைகள் மற்றும் இளைஞர்களை ஊடகவியலில் ஊக்குவித்தல் மாற்றத்திற்கான காத்திரமான முயற்ச்சியாகக் குறிப்பிடலாம். விளிம்புநிலை மக்களுடைய பங்குபற்றலே மிகச் சிறந்த மாற்றாக அமைய முடியும். எனவே, மக்களை விழிப்புணர்வு மிக்க சமூகமாக மாற்றுதல் அவசியம். அவர்களுக்கு ஊடக அறத்தையும் சமூகப் பொறுப்புணர்வையும் புகட்டுவதன் மூலம் மாற்றுத் தளத்தில் அவர்களது பங்குபற்றலை ஊக்குவிக்கலாம்.

ஊடக சுதந்திரமின்மையும் தணிக்கைகளும் வெகுஜன ஊடகங்களில் ஓங்கி ஒலிக்கப்படவேண்டிய குரல்களை மௌனிக்கச் செய்துகொண்டிருக்க, மாற்று ஊடகங்களில் ஊடக சுதந்திரத்தின் உச்ச எல்லை எவ்வாறான தாக்கங்களை ஏற்படுத்தும் என்பதைப் பற்றியும் சிந்திக்கவேண்டியது அவசியம். கட்டற்ற சுதந்திரம் என்பது

உறுதிப்படுத்தப்படாத உதிரிகளையும் புனைவுகளையும் மற்றும் கட்டுக்கதைகளையும் வெளியிடும் நிலைக்கு இட்டுச் செல்லும். மேலும், இழிநிலை ஊடகவியலுக்கும் ஊடக அறத்தைக் கேள்விக்குறியாக்குவதற்கும் காரணமாகிவிடும். இந்நிலை சமூகத்தில் எதிர்மறை விளைவுகளை உருவாக்கிவிடும்.இன்று பெரும்பாலான சமூக ஊடகங்கள் போலியான செய்திகளைப் பரப்புவனவாகவும் ஊடக அறத்தையும் சமூகப் பொறுப்புணர்வைப் பற்றியும் சிந்திக்க மறந்துவிடுவனவாகவும் இருக்கின்றன. மாற்றுத் தொடர்பாடலை அதில் பங்கேற்கும் மக்களால் மாத்திரமே கட்டுப்படுத்தமுடியும் என்ற நிர்வாக வரம்பற்ற நிலையை சாதகமான விடயங்களுக்குப் பயன்படுத்தாமல் அறமற்ற செயற்பாடுகளில் ஈடுபடுகின்றமையைச் சமூகப்பொறுப்புணர்வற்ற செயற்பாடாகவே நோக்க முடியும்.

இவ்வாறு பிரதான வெகுஜன ஊடகத்திற்கும் மாற்று ஊடகத்திற்கும் இடையே பாரிய இடைவெளி ஒன்று இருப்பதாகவே புலப்படுகின்றது. சிறிய அளவிலான பயனாளிகளைக் கொண்டிருந்தாலும் மாற்று ஊடகமானது சமூக கலாசாரச் சூழலில் மக்களின் பங்களிப்பை ஊக்குவித்து சமூகத்தில் வலிமையான செல்வாக்கைக் கொண்டுள்ளது எனலாம். பிரஜைகள் ஊடகவியல், குடிமை ஊடகவியல், கரந்துறை ஊடகவியல் என்பனவற்றை மாற்று ஊடகவியலினுள் உள்வாங்கலாம். மேலும் எமக்கான மாற்று ஊடகவியல் பற்றிய சிந்தனைகளை முன்னெடுப்பதன் மூலம் மனிதத் தொடர்பாடலுக்கு முக்கித்துவம் வழங்கவேண்டும். மக்கள் தமது வாசிப்பையும் படைப்புக்களையும் வெறும் கருத்துரைகளுக்குள் மட்டுப்படுத்திவிடலாகாது. மக்கள் தம்மளவில் கருத்துச் சுதந்திரம் உள்ளவர்களாக செயற்படுவதுடன் மனித உளவியலைச் சரியாகக் கையாளக் கூடியதாக கருத்தாக்கத்திற்கு உட்படும் போதுதான் மாற்றுத் தளங்கள் சாத்தியமாகும்.

இன்றைய காலகட்டத்தில் மாற்று ஊடகங்கள் சமூகமாற்றத்திற்கான பணியை முன்னெடுப்பதில் மேலும் வலுவாக வேண்டியது அவசியம். அதே நேரம் எதிர்காலத்திலும் சமூக மறுமலர்ச்சி ஏற்படுவதற்கு ஆரோக்கியமான மாற்று ஊடகவியல் அவசியம். அது மக்களுக்கான ஊடகவியலாகப் சமூகப் பிரக்ஞையுடன் பரிணமிக்க வேண்டும்.

உசாத்துணை:


- ரகுராம்., சி. (2015) அபிவிருத்தித் தொடர்பாடல் : மாற்று நோக்கி, 1ஆம் பதிப்பு, சேமமடு புத்தகசாலை, கொழும்பு.
- தியோடர் பாஸ்கரன்., சு. (2004) எம் தமிழர் செய்த படம், 1ஆம் பதிப்பு, உயிர்மை பதிப்பகம், சென்னை.
- Atton Chris (2001) Alternative Media, 1st Edition, Sage Publications, UK.